# காலை முரசு

பக்கங்கள் 17

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 12 புதன்கிழமை 27.11.2024 | அதிர்வு 117


## A/L பரீட்சை 3 நாள்களுக்கு ஒத்திவைப்பு



இலங்கையில் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலையால் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை 3 நாள்களுக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

05



### கொட்டும் மழைக்கு மத்தியிலும்

# மாவீரர்களை உணர்வெழுச்சியுடன் நினைவேந்த தமிழர் தாயகம் தயார்

இன்று மாவீரர் நாள். ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக வீரமுடன் களமாடி தமது உயிரை ஈந்த வீரமறவர்களை நினைவேந்தி அஞ்சலி செலுத்தும் நாள். தமிழர் தேசத்தின் விடிவுக்காக தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய மாவீரர்களை இன்று உணர்வெழுச்சியுடன் நினைவேந்த தமிழர் தாயகம் தயார் நிலையில் உள்ளது.

04

# வெள்ளத்தில் சிக்கிய உழவு இயந்திரம்! 6 மாணவர்கள் உட்பட எண்மர் மாயம்!!

அம்பாறை மாவட்டம், காரைதீவு – மாவடிப்பள்ளியில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதில் அதில் பயணித்த 6 மாணவர்கள் உள்ளிட்ட 8 பேர் காணாமல்போயுள்ளனர்.

13 பேருடன் பயணித்த உழவு

### காரைதீவில் சோகம்

இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதில் 5 மாணவர்கள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் என்றும், 6 மாணவர்கள் மற்றும் சாரதி, உதவியாளர் உட்பட 8 பேரைக் காணவில்லை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ நேற்று இரவு தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை மத்ரசா பாடசாலை முடிந்து மாணவர்கள் உழவு இயந்திரத்தில் பயணித்துக் கொண்டிருந்த தருணத்தில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் சிக்கியுள்ளது.

05






இன்று மாவீரர் நாள். மாவீரர் நினைவேந்தலில் முக்கிய இடம் பிடிப்பவை துயிலும் இல்லங்கள்.

பௌத்த – சிங்களப் பேரினவாத அரசுத் தலைமைகள் மனிதாபிமானமேயற்ற கொடுங்கோலர்கள், காட்டுமிராண்டித்தனமானவர்கள் என்ற நீங்கா அவப்பெயரை அவர்களுக்கு நிரந்தரமாக

05



# சூறாவளியாக விரிவடையும் தாழமுக்கம்; 36 மணித்தியாலங்களுக்கு அவதானம்

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த தாழமுக்கம், ஆழ்ந்த தாழமுக்கமாக வலுவடைந்துள்ள நிலையில் அது நேற்று முற்பகல் 11.30 மணியளவில் திருகோணமலையிலிருந்து 280 கிலோமீற்றர் தொலைவில் தென்கிழக்காக நிலைகொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இன்று சூறாவளியாக மாறக்கூடிய அளவுக்கு விரிவடைந்து கிழக்கு கரையை அண்மித்ததாக பயணிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன் தாக்கம் காரணமாக எதிர்வரும் 36 மணித்தியாலங்களில் வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று மாலை எதிர்வு கூறியது.

அதன்படி, வடக்கு, வடமத்திய, மத்திய, மற்றும் வட மேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்தின் சில இடங்களிலும் 150 மில்லிமீற்றருக்கும் அதிகளவான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும்.

அதேநேரம், நாட்டின் ஏனைய பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அதேநேரம், நாட்டை சூழவுள்ள கடற்பகுதிகளில் காற்றின் வேகமானது இடைக்கிடையே மணித்தியாலத்துக்கு 60 - 70 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாட்டைச் சூழவுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பரப்புகள் கொந்தளிப்பாகக் காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள சில பகுதிகள் பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில், அலைகள் 2.5 மீற்றர் முதல் 3 மீற்றர் வரை மேலெழக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரப் பகுதிகளுக்கு அண்மித்த கடற்பரப்புகளில் கடல் அலைகள் சீற்றமாகக் காணப்படும்.

எனவே, மறு அறிவித்தல் வரை நாட்டை சூழவுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற கடலுக்குச் செல்ல வேண்டாம் என கடற்படை மற்றும் மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள், வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஆலோசனைகள் குறித்து அவதானமாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# எரிவாயு பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு: லாஃப்ஸ்

எரிவாயு பற்றாக்குறைக்கு எதிர்வரும் சில தினங்களுக்குள் தீர்வு வழங்கப்படும் என லாஃப்ஸ் நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.கே.எச் . வேகபிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் 2 எரிவாயு கப்பல்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளன எம அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நேற்று முதல் குறித்த எரிவாயு தொகை சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக லாஃப்ஸ் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக லாஃப்ஸ் எரிவாயுவிற்கு சந்தையில் தட்டுப்பாடு நிலவுகின்றது.

கப்பல்களுக்கு எரிவாயுவை ஏற்றும் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக எரிவாயு பற்றாக்குறை ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

# 9 ஆயிரத்து 404 பேர் குடாநாட்டில் பாதிப்பு

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக இதுவரை 2 ஆயிரத்து 634 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 404 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சீரற்ற காலநிலை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. இதனால் யாழ். மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் குறிப்பாக 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் சீரற்ற காலநிலையின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 2 ஆயிரத்து 634 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 404 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடு முழுமையாகவும், 48 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

குறிப்பாக சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 416 குடும்பங்களைச் சேர்ந்த 1,355 பேரும், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில் 371 குடும்பங்களைச் சேர்ந்த 1,462 பேரும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 115 குடும்பங்களைச் சேர்ந்த 385 பேரும், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் 29 குடும்பங்களைச் சேர்ந்த 90 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 29 குடும்பங்களைச் சேர்ந்த 93 பேரும், சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 573 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 335 பேரும், காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் 141 குடும்பங்களைச் சேர்ந்த 508 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 226 குடும்பங்களைச் சேர்ந்த 932 பேரும், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில்79 குடும்பங்களைச் சேர்ந்த 294 பேரும், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் 470 குடும்பங்களைச் சேர்ந்த 1,520 பேரும், உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 11 பேரும், நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 51 குடும்பங்களைச் சேர்ந்த 155 பேரும், வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரும், கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 34 பேரும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 80 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேரும் என மொத்தமாக 2 ஆயிரத்து 634 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 404 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக நிலைமை மேலும் மோசமடையக் கூடிய வாய்ப்புகள் உள்ளதால் பிரதேசங்களுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# மட்டக்களப்பில் வெள்ளத்தில் சிக்கி ஒருவர் மாயம்!

## 161 குடும்பங்களைச் சேர்ந்த 522 பேர் இடம்பெயர்வு







(கனகராசா சரவணன்)

சீரற்ற காலநிலை காரணமாக மட்டக்களப்பில் வெள்ளத்தில் ஒருவர் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். அதே வேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 161 குடும்பங்களைச் சேர்ந்த 522 பேர் உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.


குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் பல பிரதேசங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ள நிலையில், பல பிரதேசங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன.

இந்தத் தொடர் மழையால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளநீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளதுடன் பல பிரதேசங்களில் வீதிகளில் உள்ள பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

பட்டிப்பளை, காத்தான்குடி, கோரளைப்பற்று, கிரான், மண்முனை வடக்கு, ஏறாவூர்பற்று செங்கலடி, பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 161 குடும்பங்களைச் சேர்ந்த 522 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை விட்டு வெளியேறி உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அதேவேளை, வெள்ளத்தினால் வெல்லாவெளிக்கும் மண்டூருக்கும் இடையிலான போக்குவரத்தும், வவுணதீவுக்கும் மட்டக்களப்பு நகருக்கும் இடையிலான போக்குவரத்தும், கிரானுக்கும் புலிபாய்ந்தகல் பிரதேசத்துக்கும் இடையிலான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது.

வெல்லாவெளிக்கும் மண்டூருக்குமான பிரதான தாம்போதிக்கு மேலால் வீதியை மூடி 4 அடி உயரத்தில் வெள்ளநீர் பாய்ந்து ஓடும் நிலையில், அதனை கடந்துக் செல்ல முற்பட்ட ஆண் ஒருவரை வெள்ளநீர் அடித்துச் சென்றதில் அவர் காணாமல்போயுள்ளார்.



# அடை மழையால் வடக்கில் ஒரு இலட்சம் பேர் பாதிப்பு!

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 25 ஆயிரம் வரையான குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேர் வரையில் பாதிப்படைந்துள்ளனர் என்று தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை, இரணைமடு, முத்தையன்கட்டு போன்ற குளங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டதன் காரணமாக தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்கள் அதிக பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றனர்.

வடக்கில் அதிகம் பாதிப்புக்களைச் சந்தித்த மாவட்டமாக மன்னார் மாவட டமும், அடுத்த நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டமும் காணப்படுகின்ற போதும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் சகல நீர்த் தேக்கங்களும் நிரம்பியுள்ள நிலையில் மழை தொடர்வதால் சகல பிரதேசங் களும் பாதிக்கப்படலாம் என அஞ்சப் படுகின்றது.



# தெதுரு ஓயாவின் நீர்மட்டம் அதிகரிப்பு

தெதுரு ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் தாழ்வான பகுதி களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள் ளது.

தெதுரு ஓயாவை அண்மித்த தாழ் வான பகுதிகளில் அடுத்த சில மணித்தியாலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் என நீர்ப்பாசன திணைக்களம் எச்சரிக்கை விடுத் துள்ளது.

இதன்படி, வாரியபொல, நிக வெரட்டிய, மஹவ, கொபெய்கனே, பிங் கிரிய, பல்லம, சிலாபம், ஆராச்சிக் கட்டுவ மற்றும் ரஸ்நாயக்கபுர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள தாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித் துள்ளது

# குடியிருப்பினுள் நுழைந்த முதலை இளைஞர்களால் மடக்கிப் பிடிப்பு

யாழ். உடுப்பிட்டி பகுதியில் மக் கள் குடியிருப்பினுள் நுழைந்த முத லையை இளைஞர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

முதலையினை அவதானித்த மக்கள் வல்வெட்டித்துறை பொலி ஸாருக்கு தகவல் வழங்கியுள்ள னர்.

அத்துடன், நேற்று காலையில் முதலையை அந்தப் பகுதி இளை ஞர்கள் மடக்கி பிடித்தனர்.

இதனையடுத்து, வல்வெட்டித் துறை பொலிஸாரினூனாக வன ஜீவராசிகள் திணைக்களத் தினருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து முதலையை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.



# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மாவீரர்களை...**

வடக்கு, கிழக்கில் 25 இற்கும் மேற்பட்ட துயிலும் இல்லங்கள், மாவீரர் நினை விடங்கள் மற்றும் விசேடமாக அமைக் கப்பட்ட மாவீரர் நினைவாலயங்களில் உணர்வெழுச்சியுடன் மாவீரர்கள் நினை வேந்தப்படவுள்ளனர்.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் துயிலும் இல்லங்கள், மாவீரர் நினை விடங்கள், விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயங்கள் சிவப்பு, மஞ்சள், வர்ண கொடிகளால் அலங்க ரிக்கப்பட்டு நினைவேந்தலுக்குத் தயார் நிலையில் உள்ளன.

இன்று மாலை 6.05 மணிக்கு ஆலயங் களில் மணியோசை எழுப்பப்பட துயிலும் இல்லங்கள், வீடுகள், பொது இடங்களில் சமநேரத்தில் சுடர் ஏற்றப்படவுள்ளது.

இதேவேளை, போரில் உயிரிழந்த தமது உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவு கூர எவ்வித தடைகளையும் அரசு ஏற்படுத் தாது என்றும், தடைகளை ஏற்படுத்த அரசுக்கு அனுமதியும் இல்லை என்றும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையி லான புதிய அரசு அறிவித்துள்ளது.

"வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த முடியும். நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்பவர்களை ஒளிப்படம் எடுக்க வேண்டாம் எனப் பாதுகாப்புத் தரப்பின ருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது." – என்றும் புதிய அரசு மேலும் தெரிவித் துள்ளது.

### ரஷ்ய இராணுவத்தில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்ட

# எங்கள் பிள்ளைகளை உடன் மீட்டுத் தாருங்கள்

## வடக்கு ஆளுநரிடம் பெற்றோர்கள் நேரில் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5 இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி ரஷ்ய இராணுவத்தில் வலுக்கட்டாயமாகச் சேர்த்ததாகக் கூறப்படுவது தொடர்பில் அவர்களது பெற்றோர்களால் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

தமது பிள்ளைகளை உடனடியாக மீட்டுத் தருமாறு ஆளுநரிடம் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

யாழ்ப்பாணம், கரவெட்டி, முள்ளியவளையைச் சேர்ந்த இளைஞர்களின் பெற்றோர்களே ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆளுநரை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

பெற்றோர்களது கோரிக்கையை செவிமடுத்த ஆளுநர், உடனடியாக





வெளிவிவகார அமைச்சின் செயலாளரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடயத்தைத் தெரியப்படுத்தினார்.

பெற்றோர்களிடம் அவர்களது விவரங்களைப் பெற்று வெளிவிவகார அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பெற்றோர்களும், உறவினர்களும் நேற்று யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பையும் நடத்தியிருந்தனர். இதன்போது அவர்கள், ரஷ்ய இராணுவத்தில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்டு உயிராபத்தில் சிக்கித் தவிக்கும் எங்கள் உறவுகளை உடனடியாக மீட்டுத் தாருங்கள் என்று மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம்...

ஏற்படுத்தித் தந்தவை இந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் மீதான அவர்களின் மிருகத்தனமான செயற்பாடுகள் தான்.

உயிரிழந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நீங்காத்துயில் கொள்வதைக் குழப்பாமல் மதித்து ஒழுகுவதுதான் மனித மாண்பு. நாகரீகப் பண்பு.

உயிரிழந்த மாவீரர்கள் நீங்காத் துயில் கொண்ட துயிலும் இல்லங்களைத் தேடித் தேடி புல்டோசர்கள் கொண்டு சிதைத் தழித்தமை மூலம் தனது இனத்தின் காட்டுமிராண்டித்தனத்தை – சிங்க(ள)ப் பண்பியல்பை – அம்பலப்படுத்தி நிற்கின்றது அந்த இனம். மனித குலத்தின் வழக்காறுகளில் சேர்க்க முடியாத பண்பியல்பின் வெளிப்பாடு நீங்கா துயில் கொண்ட பல்லாயிரம் பேரை சிதைத் தழித்த மிருகத்தனப் போக்கு.

இந்திய படையிடருடனான யுத்தம் முடிவடையும் வரை விடுதலைப் புலிகள் மாவீரர் துயிலும் இல்லங்களை அமைக்கவில்லை.

அது வரையில் உயிரிழந்த போராளிகளை சுடுகாட்டிலும், பிற இடங்களிலும் அவரவர் மத நிலைப்பாட்டுக்கேற்ப எரித்தோ புதைத்தோ விடும் வழமைதான் புலிகள் மத்தியில் இருந்தது.

இந்தியப் படை வெளியேறிய பின்னர், புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளராக ராஜன் இருந்த காலத்தில், அவர் வழிகாட்டலில் முகிழ்ந்ததுதான் துயிலும் இல்லம் கருத்து. அவரை முன்னர் 'தவ்வல் ராஜன்' என்று செல்லப் பெயரில் போராளிகள் அழைப்பதுண்டு. இப்போது அவர் லண்டனில் இருக்கின்றார்.

அவரே கோப்பாயில் அரச காணியில் – பழைய திறந்த வெளிச் சிறைச் சாலைக்கு அருகில் – முதல் மாவீரர் துயிலும் இல்லத்திற்குக் கால் கோளிட்டார்.

அப்போது வீர மரணம் அடையும் பெரும்பாலான போராளிகள் சைவர்களாக இருந்தமையால் அவர்களின் புகழுடல்கள் அவர்களின் மத முறைப்படி எரிக்கப்பட்டன. அதனால் மாவீரர்களின் வித்துடல்களை எரிக்கும் மேடை ஒன்றே கோப்பாய் காணியில் ராஜனின் வழிகாட்டலில் முதலில் அமைக்கப்பட்டது. அதன் பின்னரே எரிக்கும் வழக்கத்தை நிறுத்தி, மாவீரர்களின் வித்துடல்களை விதைக்கும் முறைமையை ஏற்படுத்தினார் தலைவர் பிரபாகரன். ஒவ்வொரு மாவீரனையும் விதைத்து, நடுகல்நாட்டி, நினைவுச் சமாதி அமைக்கும் முறையை தலைவர் உருவாக்கினார்.

அப்படி மாவீரர்கள் விதைக்கப்பட்டு, அவர்கள் நிரந்தரமாக துயிலும் இடங்களுக்கு 'மாவீரர் துயிலும் இல்லங்கள்' என்று பெயரைச் சூட்டியவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை

கோப்பாயில் தொடங்கிய மாவீரர் துயிலும் இல்லங்கள் பின்னர் தமிழர் தாயகம் எங்கும் முளைத்தன.

முதல் துயிலும் இல்லம் தோன்றிய கோப்பாய் புனித பிரதேசம் இன்று இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டு, இராணுவச் சப்பாத்து கால்களினால் மிதிக்கப்படுவது தமிழருக்கு வேதனை. சிங்களக் கலாசாரத்திற்கு மகிழ்ச்சி. இதுவே இலங்கை தீவின் துரதிஷ்டம்!

### A/L பரீட்சை

அதனடிப்படையில், இன்றும் (27), நாளையும் (28) மற்றும் நாளைமறுதினமும் (29) உயர்தரப் பரீட்சை நடைபெற மாட்டாது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

மேற்படி நாட்களில் நடைபெறவிருந்த பரீட்சைகள் டிசம்பர் மாதம் 21, 22 மற்றும் 23ஆம் திகதிகளில் இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

3 நாள்களுக்குப் பின்னர் நவம்பர் 30 ஆம் திகதி சனிக்கிழமை உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

### வெள்ளத்தில்...

அந்தப் பகுதியில் பாதுகாப்பு அதிகாரிகள் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். கனமழையால் இந்தப் பகுதியில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

காணாமல்போன மாணவர்கள் அனைவரும் 12 – 16 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மாவீரர்கள் வழி காட்டட்டும்...!

“ஒடுக்கப்படும் மானிடத்தின் விடுதலையை நோக்கிய பயணமாகவே மனித வரலாறு நகர்கிறது. ஒடுக்கப்படும் சமுதாயங்களிலிருந்தே வரலாறு படைக்கும் சக்திபெற்ற அபூர்வ மனிதர்கள் பிறக்கிறார்கள். எமது சமூகத்தில் பிறந்த அந்த அபூர்வ மனிதர்கள்தான் எமது மாவீரர்கள்.” - இது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மதிப்பீடு.

தமிழினத்திற்காகத் தங்களையே ஆகுதியாக்கிய மாவீரர்களை - தங்கள் இரத்த உறவுகளை - தமிழ் மக்கள் தங்கள் நெஞ்சத்தில் இருத்திப் பூஜிக்கும் - நினைவேந்தும் - உயரிய தினம் இன்று.

இலங்கைத் தீவில் இன யுத்தம் தன் கோரமுகத்தைக்காட்டி அடங்கியிருக்கும் இச்சமயத்தில், அந்த யுத்த வேள்வியில் ஆகுதியாய் மடிந்த மாவீரர்களின் நினைவு நாளில் அந்தப் போராட்டத்தின் மூலத்தை சற்று நோக்குவது பொருத்தமானது.

வன்முறை வடிவில் உருவகம் பெறும் அரசியல் உரிமைப் போராட்டங்கள் பெரும்பாலும் அரச வன்முறையின் எதிர்விளைவாகவே எழுகின்றன. உலக விடுதலைப் போராட்டங்களின் மூலத்தை ஆய்வு செய்து பார்த்தால் இந்த உண்மை புரியும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று மூலமும் அதுதான். விடுதலைப் புலிகள் இயக்கம் உத்தமமாவதற்கு இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே இலங்கைத் தீவில் அரச ஒடுக்குமுறை தலை தூக்கியது. இனவாதத் தீயாக மூண்ட இந்த அரச ஒடுக்குமுறை படிப்படியாக வளர்ச்சிகண்டு தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கொலை வடிவம் எடுத்தது.

சிங்கள அரச வன்முறைக்கு எதிராகத் தமிழர்கள் நிகழ்த்திய அகிம்சை வழியிலான அரசியற் போராட்டங்கள் அனைத்தும் அரச வன்முறையால் அடக்கியொடுக்கப்பட்டன. அமைதி வழிப் போராட்டங்கள் அர்த்தமற்றுப் போய்விட்ட அதேவேளை, அரச அடக்குமுறை தீவிரமடைந்து இனக்கொலைப் பரிமாணம் பெற்றதால், தமிழ் மக்கள் அரச வன்முறையை வன்முறையால் எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இன்னொருவகையில் சொல்வதானால், பேரழிவை எதிர் கொண்ட தமிழினம், தனது இருப்பிற்காக, தனது பாதுகாப்பிற்காக, ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த வரலாற்றுப் புற நிலையில்தான் விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்றம் பெற்று அரச வன்முறைக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தது.

- இப்படி தமிழர்கள் நடத்திய விடுதலைப் போராட்டத்தின் பின்புலத்தை விளக்குகின்றார் தலைவர் பிரபாகரன்.

தமிழினம் தன் இருப்பிற்காக - தன் பாதுகாப்புக்காக - தன் வரலாற்றுத் தனித்துவத்தை பேணுவதற்காக - தன் தேசியத்தைத் தக்க வைப்பதற்காக் - சுமார் 45 ஆயிரம் போராளிகளை ஆகுதியாகக் கொடுத்து ஒரு பெரும் அசகாய போராட்டத்தை நடத்தி முடித்து அடங்கியிருக்கும் இந்தச் சமயத்தில், அந்தத் தமிழ்த் தேசிய உணர்வெழுச்சி நிலையிலிருந்து தன்னைத் துறந்து, சிங்களத் தலைமையில் கீழ் தமிழர் தேசியம் சரணடைந்துவிட்டதோ என்ற ஐயத்தை கடந்த பொதுத்தேர்தல் தந்துள்ள நிலையில், இம்முறை மீண்டும் மாவீரர் தினத்தைச் சந்திக்கிறோம்.

தாயக விடிவுக்காக போராடி, மரணித்து, மடிந்து போன 45 ஆயிரத்துக்கு அதிகமான போராளிகளையும், ஒரு லட்சத்துக்கும் அதிகமான பொதுமக்களையும், அவர்களது அளவிட முடியாத உச்ச ஈகங்களையும் மறந்து, தென்னிலங்கை ஆட்சி பீடத்துக்குப் பின்னால் அணிவகுக்கத் தமிழ்த் தேசியம் மறந்த தமிழர்கள் தயாராகி இருக்கும் இந்த சமயத்தில், இந்த மாவீரர் தினம் வந்து நம்மைக் கடந்து செல்கின்றது.

தமிழ்த் தேசிய தடத்திலிருந்து வழி தவறிவிட்ட மந்தைகளாகத் தமிழினம் தென்னிலங்கையின் பின்னால் அணிவகுக்கும் அபத்த நிலையிலிருந்து, தமிழினத்தை மீட்க - சரியான திசையில் அதை வழிநடத்த - இன்றைய மாவீரர் தினச் சிந்தனை வழிகாட்ட வேண்டும். அந்த மாவீரர்களின் உயரிய இலட்சிய ஆன்மா வழி தவறும் நம் தமிழ் மக்களுக்கு சரியான வழி காட்டட்டும். இன்றைய மாவீரர் தினத்தில் அதுவே நம் பிரார்த்தனை ஆகட்டும்!

# இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி

அடுத்த வருடத்தின் முதல் 4 மாதங்களுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன் தொடர்புடைய விவாதம் எதிர்வரும் 5 மற்றும் 6ஆம் திகதிகளில்




முன்னெடுக்கப்படவுள்ளன.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனை தெரிவித்தார்.



# நாட்டின் சில மாவட்டங்களுக்கு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு 3ஆம் நிலை மண்சரிவு முன் எச்சரிக்கை (சிவப்பு எச்சரிக்கை) விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கேகாலை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் 2ஆம் நிலை எச்சரிக்கையும், காலி, களுத்துறை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் முதலாம் நிலை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயம் உள்ள இடங்களில் வசிக்கும் மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் ஹரிஸ்பத்துவ, மெததும்பர, கண்டி கங்கவட்ட கோரளை, உடுதும்பர, தோலுவ, யட்டிநுவர, உடபலத்த, பஹாத்தஹேவஹெட்ட, உடுநுவர, பாததும்பர மற்றும் தெல்தோட்டை ஆகிய இடங்களிலும், மாத்தளையில் உக்குவெல, யடவத்த, ரத்தோட்டை, பல்கமுவ, அம்பகலபல்கமுவ, வில்கமுவ, நாவுல ஆகிய இடங்களுக்கும். நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனையிலும் மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# திருப்பி அனுப்பப்பட்ட ஆறு விமானங்கள்



சீரற்ற வானிலை காரணமாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கவிருந்த 6 விமானங்கள் நேற்று திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

இதற்கமைய 3 விமானங்கள் மத்தள சர்வதேச விமான நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஏனைய 3 விமானங்கள் இந்தியாவின் திருவனந்தபுரம் நோக்கி அனுப்பப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.



# மானிப்பாயில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையோரை மதிப்பளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையோர் உயிநீத்த தமது உறவுகளை நினைவேந்தி ஈகைச் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையோர் ஏற்பாட்டாளர்களினால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் கலந்துகொண்டார்.



















# களவிஜயம் என்ற போர்வையில் அரச எம்.பிக்கள் 'போட்டோ சூட்' நடத்துவதில் பயன் ஏதுமில்லை

## மொட்டுவின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கீதநாத் காட்டம்

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் களவிஜயம் என்ற போர்வையில் கிராமங்களுக்குச் சென்று போட்டோ சூட் நடத்திப் பயனில்லை என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வசந்தபுரம் பகுதியில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவினரால் நேற்று இரவு உணவு வழங்கப்பட்டது.

இதன் பின்னர் சமகால நிலைமைகள் தொடர்பாக கீதநாத் காசிலிங்கம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்கள் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு அரசாங்கம் உதவ வேண்டும். களவிஜயம் என்று சொல்லி சுற்றுலா செய்வதில் பயனில்லை. மக்கள் எதிர்நோக்கும் வெள்ளப் பிரச்சினைகளை தீருங்கள். வெள்ளத்தால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் சுகாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியை நம்பியே பெருவாரியான மக்கள் வாக்களித்துள்ளனர். அதனால் போட்டே சூட்களை விட்டு மக்களுக்குரிய பணிகளைச் செய்யுங்கள். தேர்தல் காலங்களில் எல்லோரும் போட்டோ சூட் நடத்தினோம். இனி அது போதும். மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். எங்கள் கட்சியால் முடிந்த உதவிகளை நாம் செய்து வருகிறோம்.

அரசாங்கத்திடமே முழு கஜானாவும் இருக்கிறது. அரசாங்கம் இதற்கு உரிய தீர்வை காணவேண்டும் – என்றார்.

# வடக்குப் பாதிப்புத் தொடர்பில் ஆராய இன்று பாதுகாப்புப் பிரதிஅமைச்சர் நேரில் வருகை

(ந.லோகதயாளன்)

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் ஆராய கொழும்பில் இருந்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜெயசேகர உள்ளிட்ட குழுவினர் இன்று வடக்கிற்கு வருகை தருகின்றனர்.

நாட்டில் நிலவும் கன மழை காரணமாக பல மாவட்டங்கள் பெருமளவில் பாதித்துள்ள நிலையில் வடக்கின் பாதிப்புத் தொடர்பில் நேரில் ஆராய வடக்கிற்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜெயசேகர, அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் உதய ஹேரத் உள்ளிட்ட குழுவினர் இன்று வடக்கிற்கு வருகை தருகின்றனர். அவர்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இணைந்து பணியாற்றுவார்.

வடக்கின் பாதிப்புக்கள் தொடர்பிலும் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுடன் அவர்கள் விசேட சந்திப்பிலும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# திருகோணமலை மாவட்டத்தில் வெள்ள அபாய முன்னெச்சரிக்கை

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று, கந்தளாய், கிண்ணியா, மூதூர், சேருவில, தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுகளின் தாழ்நிலப் பகுதிகளில் நேற்றுக் காலை முதல் நாளை 28 ஆம் திகதி காலை 6.00 மணி வரையான காலப்பகுதியில் மழை வெள்ளம் ஏற்படவுள்ளது என்றும், எனவே இப்பகுதிகளில் வசிப்பவர்கள் மற்றும் இப் பிரதேசங்களுக்கு ஊடாக பயணிக்கும் பொதுமக்கள் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குறிப்பிட்டு நீர்ப் பாசனத் திணைக்களத்தின் நீரியியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் பொறியியலாளர் எஸ்.பீ.சீ.சுகீஸ்வர அவசர கபில வர்ண எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

நேற்றுக் காலை நீர்ப்பாசன திணைக்களத்தால் விடுக்கப்பட்ட இந்த அவசர எச்சரிக்கை அறிவித்தலின் படி நேற்று முன்தினம் 25 ஆம் திகதி முதல் மகாவலி நீரேந்து பகுதிகளில் பெய்து வரும் கடும் மழையினால் இவ் வெள்ள நிலமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட் டுள்ளது.

இதே வேளை மாவட்டத்தின் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நேற்று முன்தினம் இரவு முதல் மழை தொடர்ந்த வண்ணம் உள்ளது.





# அம்பாறை மாவட்டத்தில் அடை மழையினால் நாவிதன்வெளி கிட்டங்கி பாலம் வெள்ளத்தில்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை பிரதான நகரத்தையும் நாவிதன்வெளியையும் இணைக்கும் கிட்டங்கி பாலத்தின் ஊடாக வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுவதால் அந்தச் வீதி ஊடான போக்குவரத்து தடைப் பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். உயர்தர பரீட்சைக்கு செல்கின்ற மாணவர்கள் மற்றும் கடமைக்கு செல்லுகின்ற மேற்பார்வை அதிகாரிகள் இன்று காலை இந்தப் பகுதியின் ஊடாக போக்குவரத்தைச் செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். கடற்படையின ரின் உதவியோடு மேற்பார்வை அதி காரிகள் பரீட்சை நிலையங்களுக்குச் சென்றனர்.


காரைதீவு – அம்பாறை பிரதான வீதியை ஊடறுத்துச் செல்லும் சம் மாந்துறை மாவடிப்பள்ளி பிரதான பாலத்தின் ஊடாக வெள்ளநீர் பாய்ந்து செல்கிறது. இதனால் அந்த வீதியுடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதே சங்களிலும் குறிப்பாக அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், நிந்தவூர், காரைதீவு, கல்முனை, மருதமுனை, பெரியநீலாவணை நாவிதன்வெளி போன்ற பல்வேறு தாழ்நிலை பிர தேசங்களும் வெள்ள நீரினால் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.









# உன்னிச்சைக் குளம் திறக்கப்பட்டுள்ளது; வவுணதீவு மக்களுக்கு முன்னெச்சரிக்கை

## அவதானத்துடன் செயல்பட பிரதேச செயலாளர் வேண்டுகோள்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பில் உள்ள பாரிய குளங்களில் ஒன்றான உன்னிச்சை குளம் நேற்றைய தினம் திறக்கப்பட்டுள்ளதனால் வவுணதீவு பிரதேச மக்களை அவதானத்துடன் இருக்குமாறு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிற்குப்பட்ட கரவெட்டி மற்றும் மகிழவெட்டுவான் பகுதிகளை சேர்ந்த மக்களையும் அத்தோடு தாழ்நில பிரதேசங்களை சேர்ந்த மக்களையும் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு பிரதேச செயலாளர் சத்தியானந்தி நமசிவாயம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உன்னிச்சை குளத்தின் மூன்று வான் கதவுகளும் 10 அடி வரை திறக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தாழ்நில பகுதிகளில் வெள்ள நீர் நிரம்பி வருகின்றதனால் அப்பகுதியில் வசிக்கும் குடும்பங்களையும் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுணதீவில் 24 குடும்பங்களை சேர்ந்த 91 நபர்கள் இதுவரை உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும், இத் தொகையானது மேலும் அதிகரிக்கலாம் எனவும் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

# வடக்கில் முஸ்லிம் பாடசாலைகளுக்கு இரண்டு நாள்கள் விடுமுறை அறிவிப்பு

(கி.வசந்தன்)

சீரற்ற காலநிலை காரணமாக வடக்கில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு இரண்டு நாள்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் அரச அதிபர்கள் அறிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக வடக்கில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு நவம்பர் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் – இன்றும் நாளையும் – விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கிலும் இத்தகைய முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது.

ஏனைய பாடசாலகளுக்கு உயர்தரப் பரீட்சையை ஒட்டி ஏற்கனவே விடுமுறை வழங்கப்பட்டிருப்பது தெரிந்ததே.





# வவுனியாவில் பல அரசதிணைக்களங்கள் கடும் மழையினால் வெள்ள நீரில் மூழ்கின

## மன்னார் வீதியூடான போக்குவரத்தும் தடைப்பட்டது

(கி.வசந்தன்)

வவுனியாவில் பெய்து வரும் கடும் மழை காரணமாக அரச திணைக்களங்கள் பலவும் நீரில் மூழ்கின. மன்னார் வீதி ஊடான போக்குவரத்தும் தடைப் பட்டது. சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வந்த நிலையில் நேற்றுப் பிற்பகல்தொடக்கம்கடும்மழை பெய்கிறது.

இதனால் வவுனியா குடிவரவு குடிய கல்வு திணைக்களம், தாதியர் கல் லூரி, அரச சுற்றுலா விடுதி, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம் எனபன நீரில் மூழ் கியுள்ளன. காமினி மாகவித்தியாலயம் முன்பாக வெள்ள நீர் பாய்ந்து ஓடுவதால் வீதிப் போக்குவரத்தும் தடை செய்யப் பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா வைரவபுளியங் குளம் பகுதியிலும் வர்த்தக நிலையங்க ளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. வவுனியாவின் பல பகுதிகளில் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களும் வெள்ள நீரில் மூழ்கின.

இதனையடுத்து, வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வவுனியா பிரதேச செயலாளர், நகரசபைச் செயலாளர், மாவட்ட அனத்த முகாமைத்துவ பணிப்பாளர், இராணுவத் தினர் மற்றும் பொலிஸார் வருகை தந்து குறித்த அரச அலுவலங்கள், திணைக்களங்கள் மற்றும் வீதிகளில் உள்ள வெள்ள நீரை வெளியேற்றுவதற் கான நடவடிக்கையில் ஈடுபட்டனர்.


















# நாடு அரிசி இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

எழுபதாயிரம் மெட்ரிக் தொன் நாடு அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் அமைச்சரவை கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பகிரங்க விலைமனு கோரலின் பின்னர் நாட்டிற்கு அரிசி இறக்குமதி செய்யப்படுமென அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரச வணிகக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா சதொச ஆகிய நிறுவனங்களின் ஊடாக அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இதனிடையே, சந்தையில் நாடு அரிசிக்கு தொடர்ந்தும் பற்றாக்குறை நிலவுகின்றது.

# முத்தையன்கட்டு நீர்த்தேக்கத்தில் இருந்து கூடுதல் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது!

## குளத்தின் கீழ் பகுதியில் உள்ளோருக்கு எச்சரிக்கை

**(பா.சதீசன்)**

முத்தையன்கட்டு நீர்த்தேக்கத்தில் இருந்து கூடுதல் தண்ணீர் வெளியேற்றப்பட உள்ளது.

ஆகையால் குளத்தின் கீழ் பகுதியில் உள்ள அனைவரும் – குறிப்பாக மன்னகண்டல் பகுதியில் வசிப்பவர்கள் – முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு நேற்று மாலை விசேட அவசர அறிவிப்பு விடுத்துள்ளது.

நீர் வெள்ள அபாயம் காணப்பட்டால், உடனடியாக கிராம நிர்வாக அதிகாரியை (கிராமநிலதாரி) தெரியப்படுத்தி, பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

# அர்ஜுன மகேந்திரனுக்கு நீதிமன்றம் அழைப்பாணை



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜ/ன மகேந்திரனை பெப்ரவரி 25 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பக் கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணைகளுக்காக 2025 பெப்ரவரி 25 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜ/ன மகேந்திரனுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் கோரிக்கையைப் பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

# ஐயப்பன் குறித்து சர்ச்சை பாடல்: நடவடிக்கை எடுக்குமாறு கோரிகை

சபரிமலை ஐயப்பன் சுவாமி குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பாடலை பாடியதாக கானா பாடகி இசைவாணி மற்றும் நிகழ்ச்சியை நடத்திய நீலம் அமைப்பு மீது நடவடிக்கை எடுக்க கோரி இந்து மக்கள் கட்சி சென்னை பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளது.

இந்து மக்கள் கட்சியின் மகளிர் அணி மாநில தலைவர் சுசிலா தேவி சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அளித்துள்ள புகார் மனுவில்,

“இந்தியாவில் பலகோடி மக்களின் உணர்வுகளோடு கலந்துவிட்ட சபரிமலை ஐயப்பன் சுவாமி குறித்து, சமீபத்தில் மக்கள் உணர்வை புண்படுத்தும் வகையிலான ஒரு பாடல் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

இந்த பாடலை இயக்குநர் பா.ரஞ்சித்தின் நீலம் கலாச்சார மையம் நடத்திய நிகழ்ச்சியில் கானா பாடகி இசைவாணி பாடியுள்ளார். கடவுள் நம்பிக்கை உள்ளவர்களின் மனங்களைப் புன்படுத்தும் வகையில் மட்டுமில்லாமல், சமூக நல்லிணக்கம் மற்றும் அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையிலும் பாடல் வரிகளை பயன்படுத்தி உள்ளனர்.

இந்த பாடல் மக்களிடையே வெறுப்புணர்வையும் கலவரத்தையும் ஏற்படுத்தும் வகையில் உள்ளதாலும், தமிழ்நாடு மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் உள்ள ஐயப்ப சுவாமி பக்தர்கள் மனங்



களையும், ஐயப்ப சுவாமி மீது பக்தி கொண்ட பெண்களையும் வேதனைக்கு உள்ளாக்கும் வகையில் உள்ளது.

எனவே, இந்த விவகாரத்தில், உடனே தலையிட்டு, பாடலையும் மற்றும் நீலம் அமைப்பையும் தடை செய்ய வேண்டும். வன்முறையை தூண்டும் வகையில் செயல்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.”– என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# இசைவாணி மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் நீதிமன்றம் நாடுவோம்: பா.ஜ.க. வழக்கறிஞர்கள்

‘சபரிமலை ஐயப்பன் குறித்து சர்ச்சைக்குரிய பாடல் பாடிய இசைவாணி மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் நீதிமன்றத்தை நாடுவோம்’ என பா.ஜ.க. மாநில வழக்கறிஞர் அணி தலைவர் வணங்காமுடி கூறியுள்ளார்.

மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் பா.ஜ.க. வழக்கறிஞர் பிரிவு சார்பில் தேசிய அரசமைப்பு தினம் கொண்டாடப்பட்டது. மதுரை மாவட்ட பா.ஜ.க. வழக்கறிஞர் பிரிவு தலைவர் ஐயப்ப ராஜா தலைமை வகித்தார். பாஜக வழக்கறிஞர் பிரிவு மாநிலத் தலைவர் வணங்காமுடி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வணங்காமுடி,

“சபரிமலை ஐயப்பன் குறித்து அவதூறாக பாடல் பாடிய இசைவாணி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி பா.ஜ.க. சார்பில் மாநிலம் முழுவதும் புகார் அளிக்கப்படுகிறது.

இந்தப் புகார் மீது பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் நீதிமன்றத்தை நாடுவோம். இசைவாணி பாடல் ஒரு திட்டமிட்ட சதி, இந்து மதத்தை தொடர்ந்து கொச்சைப்படுத்த



வேண்டும் என நினைத்து இதை செய்கின்றனர்.

இதற்கும் தமிழகத்தில் ஆட்சி நடத்தும் தி.மு.க. அரசுக்கும் தொடர்பு உள்ளது. பல்வேறு இயக்கங்கள் வைத்தும் சில நபர்களை வைத்தும் இந்து மதத்தை கொச்சைப்படுத்த வேண்டும் என தமிழக முதல்வரும், துணை முதல்வரும் செயல்பட்டு வருகின்றனர். ஐயப்பன் பாடலை வைத்து இந்து மதத்தை கொச்சைப்படுத்துவதை பா.ஜ.க. வழக்கறிஞர் பிரிவும் சும்மா விடாது.” என்று தெரிவித்துள்ளார்.

# திருப்பதி கலப்பட நெய் விவகாரம்: 2 ஆவது நாளாக சி.பி.ஐ. விசாரணை

திருப்பதி தேவஸ்தானத்திற்கு கலப்பட நெய் விநியோகம் செய்த விவகாரம் தொடர்பாக கடந்த 2 நாள்களாக உச்ச நீதிமன்ற உத்தரவின்பேரில் சி.பி.ஐ. அதிகாரிகள் தலைமையில் அமைக்கப்பட்ட சிறப்பு ஆய்வு குழு திருமலை, திருப்பதி, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் தீவிர ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு பிரசாதம் தயாரிக்க கடந்த ஜெகன் மோகன் ரெட்டி ஆட்சியின் போது, விலங்கு கொழுப்பு கலந்த நெய்யை விநியோகம் செய்ததாக கூறப்படும் குற்றச்சாட்டை விசாரிக்க, முதலில் ஆந்திர அரசு சிறப்பு ஆய்வு குழுவினை நியமனம் செய்தது. இக்குழு 3 நாள்கள் விசாரணை நடத்திய சமயத்தில், முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் ஒய்.வி. சுப்பாரெட்டி உட்பட மேலும் சிலர் இது குறித்து உச்ச நீதிமன்றத்தில்



மனு தாக்கல் செய்தனர்.

இதனை விசாரித்த நீதிமன்றம், சி.பி.ஐ. அதிகாரிகள் தலைமையிலான குழுவினை நியமனம் செய்து விசாரிக்க உத்தரவிட்டது. இதைத்தொடர்ந்து, ஆந்திர அரசால் நியமனம் செய்யப்பட்ட விசாரணை குழு ரத்து செய்யப்பட்டு, 2 சி.பி.ஐ. அதிகாரிகளால் குழு நியமனம் செய்யப்பட்டது. அதன்படி, திருமலை, திருப்பதி மற்றும் திண்டுக்கல்லுக்கு சென்ற சி.பி.ஐ. குழு தீவிர விசாரணை நடத்தி வருகிறது.

இதில் 2 ஆம் நாளான நேற்று முன்தினம் திருப்பதி கிழக்கு பொலிஸ் நிலையம், தேவஸ்தான வர்த்தக துறை ஆகிய இடங்களில் விசாரணை மேற்கொண்டது.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் இது தொடர்பாக அளித்த புகாரின் அடிப்படையில் திருப்பதி கிழக்கு பொலிஸ் நிலையம் எடுத்த நடவடிக்கைகள் என்னபது குறித்து விசாரிக்கப்பட்டது. அதேபோன்று, ஜெகன்மோகன் ரெட்டி ஆட்சியின் போது நெய்க்கு விலைமானு போட்டவர்கள் யார்? எத்தனை பேர் விலைமனுவில் பங்கேற்றனர்? அவர்கள் குறிப்பிட்ட விலை என்ன? யார் விலைமனு எடுத்தார்? அந்த விலைமனு நிபந்தனைகள் என்னென்ன? போன்றவை குறித்து சி.பி.ஐ. அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

ஏற்கெனவே திருப்பதி தேவஸ்தானத்திற்கு நெய் விநியோகம் செய்த திண்டுக்கல் ஏ.ஆர். டெய்ரி நிறுவனத்தில் சி.பி.ஐ. தனிக்குழு நேரில் சென்று ஆய்வு நடத்தியது குறிப்பிடத்தக்கது.





# போர் நிறுத்தத் திட்டத்திற்கு இஸ்ரேல் பிரதமர் ஒப்புதல்

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு போர் நிறுத்த திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

காசாவில் உள்ள பலஸ்தீனர்கள் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்ரேல் மீது லெபனானில் இயங்கி வரும் ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கடந்த மாதத்திலிருந்து இரு நாடுகளுக்கு இடையிலான நேரடி தாக்குதல் அதிகரித்துள்ளது. லெபானான் மீது தரைவழி மற்றும் வான் தாக்குதலை இஸ்ரேல் அதிகரித்தது. அதற்கு ஹிஸ்புல்லாவும் பதிலடி கொடுத்து வருகிறது. இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு, இஸ்ரேல் அதிகாரிகளுடன் பாதுகாப்பு ஆலோசனை நடத்திய பிறகு போர் நிறுத்த திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இதனைத் தொடர்ந்து லெபனான் உடனான போர் நிறுத்தத்திற்கான வாக்கெடுப்பு இஸ்ரேல் அமைச்சரவையில் நேற்று நடைபெறுகிறது.

இதனைத் தொடர்ந்து போர் நிறுத்தம் உடினடியாக ஏற்படலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் அதிகாரிகள் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஐ.நா. அதிகாரிகளுடன் இஸ்ரேல் அதிகாரிகள் இன்று மாலை சந்திக்கவுள்ளதுடன். அப்போது போர் நிறுத்தம் குறித்து முடிவு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





# இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா ரொக்கெட் வீசி தாக்குதல்





இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் 250 இற்கும் மேற்பட்ட ரொக்கெட்களை வீசி தாக்குதல் நடாத்தியுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளனர்.

இஸ்ரேல் நாட்டின் ஆக்கிரமிப்பை எதிர்த்து கடந்த ஆண்டு ஹமாஸ் அமைப்பினர் அந்நாட்டுக்குள் அதிரடியாக நுழைந்து திடீர் தாக்குதல் நடத் தினர்.

இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். 200 பேர் வரை பணயக்கைதிகளாக அழைத்துச் செல்லப்பட்டனர். இதில் 117 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

திடீர் தாக்குதலுக்கு பதிலடியாக, இஸ்ரேல் கடந்த 13 மாதமாக பலஸ்தீனிய நகரங்கள் மேல் தாக்குதல் நடத்தி 44 ஆயிரம் பேரை கொலை செய்துள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் மற்றும் சுற்றுவட்டார பகுதிகள் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் நேற்று முன்தினம் ரொக்கெட் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஒரே நாளில் இஸ்ரேல் மீது 250 இற்கும் மேற்பட்ட ரொக்கெட்களை வீசி தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இந்த தாக்குதலில் 7 பேர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.11.2024




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை.இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம். இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சினைகளை கையாள கடின முயற்சி தேவை .

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் ஃ மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.11.2024




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப் பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச் சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.




உங்களுக்கு பயன் தரும் வகை யி லான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத் துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் மனதில் சில இலக்குகளை கொண்டிருப்பீர்கள். அவைகளை செய லாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிக ளின் பாராட்டு கிடைக்கும்.பணிகளை உற்சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும். இதனால் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும். புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

